REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu". A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 7உ திங்கள் (24—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 8உ செவ்வாய் (25—10—55) [இதழ் 172

மன்னர் நாடு திரும்பும்வரை தாடி வளர்த்தவர்கள்

2,000 பேர் தாடி எடுத்தனர்

என்டெப்பி (உகாண்டா), அக். 22—

நாடு கடத்தப்பட்ட தங்கள் மன்னரான இரண்டாம் கபாகா முடேசா நாடு திரும்பும் வரையில், முகக்ஷவரம் செய்துகொள்வதில்லை என்று உறுதி மேற்கொண்டு தாடி வளர்த்திருந்த சுமார் 2,000 பேர்கள், தங்கள் மன்னர் காபாகா இரண்டாண்டுகளுக்குப்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை மந்திரிகளின் கோழைத்தனம்!

'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு கோரவே இல்லை?

எஞ்சிய தமிழ் வட்டங்கள் சென்னையுடன் இணைய வேண்டுமென வாதிடவில்லை

டில்லி முதன் மந்திரிகள் மாநாட்டு நடவடிக்கைகள்

புதுடில்லி, அக். 23—

"கேரளத்துடன் இணைக்கவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ள திருவாங்கூர் தமிழ் நாட்டைச் சேர்ந்த நான்கு தாலுகாக்களும் தமிழகத்துடன் இணையவேண்டுமெனவும், தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கையான சென்னை மாநிலம் என்ற பெயரை நீக்கி, இனி, 'தமிழ் நாடு' என்றே அழைக்கவேண்டும் என்பதையும் வற்புறுத்துகிற ஆற்றலும் துணிவும், இங்கு நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொண்ட சென்னை மந்திரிகளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

'துங்கபத்திரா அணைத்திட்டம் குறைவின்றி நிறைவேற, பெல்லாரியை ஆந்திராவுடன் இணைக்கவேண்டும்' என்ற குழுவினரின் விவாதம், பெரியாறு அணை நிறைவேற—தேவிகுளம், தமிழகத்துடன் இருக்கவேண்டும் என்பதற்கும் பொருந்தும்' என்று மட்டும் தெரிவித்திருக்கின்றார், சென்னை மந்திரி பக்தவத்சலம்.

மேலும், கேரளத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகள் சென்னையுடன் இணைய வேண்டும் என்பதை வற்புறுத்தாததற்குக் காரணம், 'சென்னை அதிகமான நிலப் பரப்பிற்கு ஆசைப்படுகிறது' என்று எவரும் கருதிவிடக்கூடாது என்றே மந்திரிகள் எண்ணியதுதானும். எல்லைத் தகராறுகள் குறித்து பிறிதோர் சமயத்தில் தொடர்புடைய இரு மாநில சர்க்கார்களும் பேசித் தீர்த்துக்கொள்ளலாமாம்.

மாநாட்டில் கலந்துகொண்ட இதர மாநில மந்திரிகள் எல்லாம், தங்கள் கோரிக்கைகளைத் துணிவுடன் வலியுறுத்தி இருக்கின்றனர்.

மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, பெல்லாரி நகரும், மாவட்டமும் மைசூருடன்தான் தொடர்ந்து இருக்கவேண்டும்—என்ற தனது கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார். துங்கபத்திரா அணைக்கட்டுத் திட்டம், எந்தவகையிலும் பெல்லாரி, மைசூரில் இருப்பதால் பாதிக்கப்படாது என்று, தான் உறுதி வழங்க முடியும் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி முதன் மந்திரிகூட, குழுவின் சிபாரிசைக் கண்டித்து, திரு-தமிழ் நாட்டில் உள்ள 5 தமிழ் தாலுகாக்களை தமிழகத்துடன் இணைக்கக்கூடாது என்று குரல் கொடுத்திருக்கிறார். 'தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் தாலுகாக்களை சென்னையுடன் இணைப்பதால் கேரளத்தின் வளம் குன்றும்' என்றும் அவர் கூறினாராம்.

இரண்டு நாட்களிலும் பல மாநில முதன் மந்திரிகளும், மந்திரிகளும் பேசியிருக்கின்றனர்.

இராஜப்பிரமுகர்களை ஒழிப்பது, மாநிலங்களிடையே உள்ள தர வேறுபாடுகளை நீக்குவது போன்றவற்றில் ஒருமித்த கருத்துத் தெரிவிக்கப்பட்டதாம்.

மாநில புது அமைப்பு மசோதாவை அடுத்த மே திங்களில் மக்கள் சபையில் கொண்டுவருவது என்றும், புதிய மாநிலங்கள் அடுத்த அக்டோபர் முதல் அமுலுக்கு வருவது என்றும், தேர்தல் வரையில், இடைக்கால மந்திரி சபைகள் 'காபந்து' சர்க்கார்—அமைவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

முடிவு எதும் மேற்கொள்ளப் படாவிட்டாலும், வரும் பிப்ரவரி திங்களுக்குள் மாநில புது அமைப்புக்கான இந்தியப் பேரரசின் நகல் மசோதாவை, மாநில சட்டசபைகள் பரிசீலித்துக் கருத்தறிவிக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

மாநிலங்களுக்கிடையே எழக்கூடிய சிறு சிறு எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள எல்லைக் குழுக்கள் நியமிப்பது என்ற பொதுவான கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புதிய மாநிலங்கள் அமையும் போது எவரையும்—சர்க்கார் ஊழியத்திலிருப்போரை வேலையிலிருந்து நீக்கி ஆட்குறைப்புச் செய்யக்கூடாது என்பதையும் எல்லா மாநிலத்தவரும் ஒப்புக்கொண்டனராம்.

மராட்டியர் யோசனை: குஜராத்தியர் எதிர்ப்பு

அகமதாபாத்—

சம்யுக்த மராட்டியத்திற்கு மாற்று யோசனையாக, எல்லா மராட்டிய, குஜராத்திப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரு கூட்டு மாநிலம் அமைக்க வேண்டும் என்று மராட்டிய பிரதேசக் காங்கிரஸ் வெளியிட்டிருப்பதை பம்பாய், குஜராத்தி காங்கிரசார் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

இந்த யோசனை, குஜராத்தில் உள்ள காங்கிரஸ், மற்றும் காங்கிரசல்லாத எந்த இயக்கத்தாலும் ஒத்துக்கொள்ள முடியாதது. என்றும் கருதப்படுகிறதாம்.

தொடர்புடைய இரு சாராரும், ஒத்துக்கொள்வதானால்தான், குழுவின் சிபாரிசுகளை சர்க்கார் புனராலோசனை செய்யும் என்று, மேலிடம் தெரிவித்தது. எனவே ஒரு தலைப்பட்சமான கோரிக்கைகளையும், யோசனைகளையும் மேலிடம் ஏற்றுக்கொள்ளும் என்பதற்குக் காரணமேயில்லை என்றும் கூறப்படுகிறது.

'அச்சத்தால் அமைச்சர் அதிர்ச்சியுறுகிறார்'

'தேர்தல் கிணறு பாழானதாக இருந்தால் அவர் மட்டும் தப்ப இயலுமா?'

அமைச்சருக்கு அண்ணாவின் பதில்

"காங்கிரசைக் கண்டித்து நாம் பேசியபோது, 'இவர்கள் ஏன் தேர்தலில் நிற்கக்கூடாது—வீண் வாய்ப்பேச்சுக்காரர்கள் தானே இவர்கள்?' என்று அமைச்சர் சுப்பிரமணியம் உட்பட காங்கிரஸ்காரர்கள் பலர் பேசி வருவது வழக்கம். 'வருகின்ற மாநில மாநாட்டில் முடிவு செய்யப்படுமானால், வரப்போகும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்வோம்' என்பதாக நாம் கூட்டங்களில் பேசிய பிறகு, சேலத்தில் பேசிய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், 'அண்ணாதுரை தேர்தலில் குதிப்பதாகச் சொல்லி, பாழுங்கிணற்றில் குதித்துவிடக் கூடாது,'—என்று எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் செய்தி கண்டேன்; அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கு நாம் சொல்லுகிறோம்—'நாங்கள் குதிக்கப்போகும் தேர்தல் கிணறு பாழுங் கிணறாக இருந்தால், உங்களை விட்டுவிட மாட்டோம்; உங்களையும் சேர்த்து இழுத்துக் கொண்டுதான் அதில் குதிப்போம்; உங்களுக்கு அது நல்ல கிணறாக இருந்தால் எங்களுக்கும் அது நல்ல கிணறாக இருக்கட்டும்; உங்களுக்கு அது பாழுங்கிணறாக இருந்தால் எங்களுக்கும் அது பாழுங்கிணறாக இருக்கட்டும்; அச்சத்தின் விளைவாக கனம் அமைச்சர் அவர்கள் அதிர்ச்சி அடையக்கூடாது; தேர்தல் நெருங்கட்டும்—அது குறித்துப் பார்த்துக்கொள்ளலாம்,"

—என்று, அண்ணா அவர்கள், 16—10—55-ல் தஞ்சை மாவட்டம் பாபநாசம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

ஆசிரியர்கள் மீது ஆசாத் பாய்ச்சல்!

'சொந்த நலன்களுக்கு மாணவர்களை பயன்படுத்துகின்றனர்'

புதுடில்லி, அக். 23—

"சில நேரங்களில் சில அரசியல் கட்சியினர் தங்கள் கட்சியின் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்; இன்னுஞ் சில நேரங்களில்—நான் மிக வருந்துகிறேன்—ஆசிரியர்கள்கூட தங்களின் சுயநலன்களை ஈடேற்றிக்கொள்வதற்காக மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

"மாணவர்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லும் ஆசிரியர்கள், அந்த நாணயமான பெயருக்கு உரியவர்கள் அல்ல,"

என்று, இந்தியப் பேரரசின் கல்வி இலாகா அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத், பல்கலைக் கழக இளைஞர் திருவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், மாணவர் சிற்சில நேரங்களில் கிளர்ச்சிகளிலும், போராட்டங்களிலும் ஈடுபடுவதற்கு முழுக்காரணமானவர்கள் மாணவர்கள் அல்லர் என்றும், அவர்களின் பின்னாலிருந்து கொண்டு சிலர் அவர்களை இத்தகு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டினார்.

"இளைஞர்கள்தான் நாட்டின் எதிர்காலம்; ஏனெனில், அவர்கள்தான் சமுதாய தலைவிதியை நிர்ணயிக்க இருப்பவர்கள்; எனவே, இளைஞர்கள், உயர்ந்த இலட்சியங்களால் தூண்டப்பட்டு, நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கடினமாக உழைப்பரேல், நாடு வளம் பெறும்; இன்றேல், நாட்டின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாயிருக்கும். நாட்டிற்காகவும், தங்களின் சொந்த எதிர்காலத்திற்காகவும், இன்றைய இளைஞர்கள்—ஆண்களும், பெண்களும், தங்களின் பொறுப்பு என்ன என்பதை உணர்ந்தாகவேண்டும்,"

என்றும் குறிப்பிட்ட ஆசாத், தொடர்ந்து பேசுகையில், அலகாபாத், பாட்னா பல்கலைக் கழகங்களின் மாணவர்களது நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, "என்ன இருப்பினும், மாணவர்கள், சட்டங்களை மீறி சர்க்காருக்கு எதிரான இயக்கம் நடத்த முற்படுவது கூடாது," என்றும் கூறினாராம்.

'பஞ்சாப் மொழி மாநிலம் பெற்றே தீருவோம்'

மாஸ்டர் தாராசிங் உறுதி

அமிர்தசரஸ், அக். 24—

"பஞ்சாபி மொழிவழி மாநிலம் வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை எக்காரணம் கொண்டும் அகாலியர் கைவிடுவதற்கில்லை,"

என்று, மாஸ்டர் தாராசிங் நிருபர்களிடத்தில் தெரிவித்திருக்கிறார்.

"பஞ்சாப் மொழி மாநிலம் அமைக்க இந்திய சர்க்கார் சம்மதிக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, தாராசிங் சொன்னார்:—

"நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்; அமைதியாக, சட்ட வரம்பிற்கு உட்பட்டுப் பட்டினிப் போர் தொடுப்போம்; மறியல் துவங்குவோம்; இறுதியாக வரிகொடா இயக்கம் நடத்துவோம்."

ரூ. 1-கோடி மூலதனத்தில்...

அசாம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை

அசாமில், ரூ. 1-கோடி மூலதனத்தில், ஒரு காகிதத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு சில தனிப்பட்ட நபர்கள் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ளனராம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 24—10—'55 திங்கள்

சந்தடிக்கிடையே!

மாநில புது அமைப்புத் திட்டம் வெளியானதை ஒட்டி, இந்தியத் துணைக்கண்டமெங்கணும் ஒரு வகைப் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. தொடர்புடையோரும் தொடர்பற்றோரும், ஏமாற்றமுற்றோரும், ஏற்றம் பெற்றோரும், பாதகம் அடைந்தோரும், சாதகம் கிட்டியோரும், போர் முரசு கொட்டுவோரும், எதிர்க் கூச்சல் எழுப்புவோரும், ஏனையோரும், கடந்த இரு கிழமைகளாக, மாநிலக் குழுவின் திட்டம் குறித்தே பேசிவருகின்றனர்.

பஞ்சாபில் போர் முரசு கொட்டுகின்றனர் சீக்கியர், பஞ்சாபி மொழி மாநிலம் கோரி. தாராசிங் டெல்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார் மேலிடத்தாருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு.

இமாசலப் பிரதேசத்தின் தலைவர்கள், குழுவின் சிபாரிசுக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றனர். இமாசலப் பிரதேசம் பஞ்சாப் மாநிலத்துடன், குழுவின் திட்டப்படி இணைக்கப்படக்கூடாது என்று எதிர்க்கின்றனர்.

மத்திய பாரத், திட்டப்படி மத்தியப்பிரதேசத்துடன் இணையக்கூடாது என, காங்கிரசாரே கண்டனம் தெரிவிக்கின்றனர்.

மேற்கு வங்கத்துடன் பீகாரின் சில பகுதிகளைச் சேர்க்குமாறு குழு சிபாரிசு தெரிவித்திருப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று பீகார் மந்திரி சபையினர் தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.

பம்பாயைத் தலை நகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் காணுமல் சாகமாட்டோம் என்று மராட்டிய மண்டலமே அதிரும் வண்ணம் காங்கிரஸ் தலைவர்கள் போர்ப் பரணி பாடுகின்றனர். பண்டித நேரு விடுத்த வேண்டுகோளையும் ஏற்க மறுத்து, மராட்டிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மராட்டியர் தெரிவிக்கும் மாற்று யோசனையை குஜராத்தியர் ஏற்கமாட்டார்கள். தங்களுக்கு மேலிடத்தில் கிடைத்திருக்கும் செல்வாக்கினால் பம்பாய் தங்களுக்கில்லாவிடினும், 'மராட்டியருக்குக் கிடைக்காது செய்தேதிருவோம்; பம்பாயை, மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவோம்' என்று வீம்பு பேசுகின்றனர், குஜராத்தித் தலைவர்கள்.

'பீகார் மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம் எங்களுக்குத் தரப்படவேண்டும்; அதனைத் தர சிபாரிசு செய்யாது விடுத்த குழுவினரின் போக்கு கண்டனத்திற்குரியது' என்று ஒரியர் முணுமுணுக்கின்றனர்;—சினந்துகொள்கின்றனர். சிலர் சீறி எழுந்து ஓடிவரும் இரயில்களை நிறுத்தி அவை தொடர்ந்து ஓடவிடாது செய்து வருகின்றனர்.

'மைசூர் தனி மாநிலமாகவே இருக்கவேண்டும்; திட்டப்படி, கர்னடகத்துடன் இணையக் கூடாது' என்று மைசூர் காங்கிரசார், முதன் மந்திரி அனுமந்தையா மீதே 'தாக்குதல்' துவக்கியிருக்கின்றனர்.

'ஒரு நீதிபதி தந்த தீர்ப்புக்கு மாருக, பெல்லாரியை மீண்டும் ஆந்திரத்துடன் இணைப்பது அநீதி, அக்கிரமம்; அதை அனுமதியோம்' என்கின்றனர் அந்த கன்னடக் காங்கிரசார்.

ஆந்திரரோ, 'தெலுங்க மக்களுக்கு இரு மாநிலங்கள் ஏன்? தெலிங்கானு 1,961 வரை தனியாக எந்த அவசியம் கருதி இருக்க வேண்டும்? உடன், விசால ஆந்திரம் அமைந்தே தீர வேண்டும்' என்று தங்களுக்குள்ள இயற்கையான வீராவேசத்தோடு பேசுகின்றனர். ஒரிசாவில் உள்ள பர்லாகிமிடி எங்களுக்கு வந்தே தீரவேண்டும் என்று வேறு கேட்கின்றனர்.

தமிழ்ப் பெரு மக்களோ, கேரளம், கன்னடம், ஆந்திரம் என்று பெயர் இருக்கும்போது, தமிழகம் என்று பெயரிடாமல் சென்னை என்று ஏன் இன்னும் அழைக்க வேண்டும். திரு-கொச்சியிலுள்ள ஒன்பது தமிழ்த் தாலுகாக்களில், ஐந்து மட்டும் வழங்கிவிட்டு, நான்கினை கேரளத்தில் சேர்ப்பது என்ன நியாயத்தின்பாற்பட்டது என்று கேட்பதோடு நின்றில்லாது, தென்னுட்டு மாநிலங்கள் நான்கும் இணைந்த சுதந்திர திராவிடம் மலரும் வரையில் ஓயமாட்டோம் என்று திட்டமாகத் தெரிவித்துவிட்டிருக்கின்றனர்.

இவை எல்லாம், கடந்த இரு கிழமைகளில் மாநிலக் குழுவின் திட்டத்தைப் பற்றி வெளிவந்துள்ள செய்திகளின் திரட்டு.

சிபாரிசுகளை ஒட்டி எழுந்துள்ள சந்தடி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மக்களின் கவனம் முழுதும் இந்தச் சந்தடிகளில் திருப்பப்பட்டிருக்கிறது.

இந்தச் சந்தடிக் கிடையே கூட இந்தியப் பேரரசினர், தங்களது உற்றாரும் உறவினரும் சுற்றத்தாரும் வாழும் வடநாட்டை வளப்படுத்தும் வேலையைத் தொடர்ந்து செய்த வண்ணம் இருக்கின்றனர்.

மாநிலப் புதுஅமைப்புத் திட்டம் பற்றி மக்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். வடநாட்டவர் தொழிற் திட்டங்களைப் புதிது புதிதாகத் தீட்டி நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர்.

இருபது கோடி ரூபாய் செலவில், பக்ரா-நங்கல் பகுதியில் மேலும் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை. சிந்திரியைப் போன்றது, அளவிலும் உருவிலும். அதேபோல் பத்து கோடி ரூபாய் செலவில் பம்பாயை அடுத்த ட்ராம்பேயில் ஒரு உரத் தொழிற்சாலை.

அதே பம்பாயில் இரண்டே கால் கோடி ரூபாய் செலவில் 'டெலிவிஷன் ஸ்டுடியோ' நிறுவுவதற்கு இந்திய சர்க்காருக்கும்—சில மேற்கு ஜெர்மனி மின்சார நிறுவனங்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவிலேயே முதலாவது டெலிவிஷன் ஸ்டுடியோ அமைக்க பேச்சுவார்த்தைகள், ஜெர்மன் நிறுவனத்தாருடன்.

கல்கத்தாவில் ஒரு மூக்குக் கண்ணுடித் தொழிற்சாலை, சில கோடி ரூபாய் செலவில்.

அத்தனையும் வட நாட்டில் தான்.

தென்னுட்டில் வழக்கம் போல ஏதும் இல்லை.

இந்தப் புதிய தொழிற்சாலை அமைப்பு பற்றிய செய்திகளும் கடந்த இரு கிழமைகளில் வந்தவைதான்.

மாநிலக்குழுவின் திட்டத்தினுல் எழுந்துள்ள சந்தடிக்கிடையே வட நாடு வளமாகும் வேகத்தையும் தென்னுடு தேயும் சோகத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஆசியாவின் அபிவிருத்தி

தாமதமாயின் ஆபத்தாம்!

சிங்கப்பூர்—

"ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தியில் தாமதம் செய்வது ஆபத்தானதாகும்; பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தாவிடில், அடிப்படையான வாழ்க்கை வசதிகள்கூட இல்லாமல் திண்டாடும் பெருவாரியான மக்களின் ஆத்திரத்தையும், கண்டனத்தையும் ஆசிய நாடுகளின் சர்க்கார்கள் சமாளிக்க வேண்டிய நிலை நேரிடும்" என்று, கொழும்புத் திட்ட ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச்சென்ற இந்தியத் திட்ட இலாகா அமைச்சர் குல்சாரிலால் நந்தா, பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"பல்வேறு நாடுகளிலுள்ள பிரிவினை சக்திகளை ஒழித்துக்கட்ட வேண்டுமானுல், மக்களின் வாழ்க்கைத்தரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும்" என்று அவர் கூறியபோது, 'பிரிவினை சக்திகள் என்று சொல்லும்போது கம்யூனிசத்தைக் குறிப்பிடுகிறீர்களா?'—என்று கேள்வி எழுப்பப்பட்டது.

'பிரிவினை சக்திகளில்—இடதுசாரியும் இருக்கலாம்; வலதுசாரியும் இருக்கலாம்—என்று அவர் மழுப்பிவிட்டாராம்!

மாநில சீரமைப்புக் குழு உறுப்பினர்கள்

ஆலோசகர்களாக நியமனம்?

புதுடில்லி, அக். 21—

மாநில சீரமைப்புக் குழு தனது அறிக்கையைத் தாக்கல் செய்ததுடன் கலைக்கப்பட்டுவிட்டது என்றாலும், மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் சிக்கலுக்கு ஆலோசனை கூறுபவர்களாக, குழு உறுப்பினர்களான பாசல் அலி, பண்டிட் குன்ஸ்ரு சர்தார் பணிக்கர் ஆகியோர் அமர்த்தப்படுவர் என்று தெரியவருகிறது.

குழுவினரின் சிபாரிசுகள் குறித்து மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், அதுபோது சிபாரிசுகளை மேற்கொண்ட அங்கத்தினர்களின் யோசனையும் பயன்படவேண்டுமென்பதாலுமே இந்த நியமனம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'கொச்சி - சித்தூர் கோவையுடன் சேர வேண்டும்'

நிதி மந்திரியிடம் தூதுக்குழுவினர் வற்புறுத்தல்

சென்னை, அக். 21—

கோவை மாவட்டத்திலிருக்கும் கொச்சி-சித்தூர் பகுதியை கோவை மாவட்டத்துடன் சேர்க்க வேண்டுமென நிதிமந்திரி சுப்பிரமணியத்தைச் சந்தித்த தூதுக் குழுவினர் வற்புறுத்தியிருக்கின்றனர்.

அப்பகுதியில் வாழ்வோரில் பெரும் பகுதியினர் தமிழர்கள் என்பதுடன், பகுதி எல்லாவகையாலும் கோவையுடன் இணைந்த ஒன்று என்றும் தூதுக் குழுவினர் விளக்கியிருக்கின்றனர்.

குடிவார முறை, சாகுபடி பொருள்கள், மண் வளம் எல்லாம் கோவை மாவட்டத்தை ஒத்திருக்கின்றன என்றும், கொச்சி-சித்தூர் தாலுகாவின் மொத்த மக்கள் தொகை 1,44,000 என்றும், அதில் 80,000 பேர்வரை மட்டுமே அத்திட்டில் வசிக்கின்றனர் என்றும், இவர்களில் 70 சதவிகிதத்தினர் தமிழர்கள் என்றும் தூதுக் குழுவினர் விளக்கியிருக்கின்றனர்.

மூன்ரும் உலகப் போரின் விளைவுகள்

மா-சே-துங் தரும் படப்பிடிப்பு

டோக்கியோ, அக. 22—

மூன்ருவது உலக யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் மறுகணமே, உலகத்தின் 80 சத விகிதப் பகுதி கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திற்குள் வரும் என்று, சீனக் குடியரசுத் தலைவர் மா-சே-துங், ஜப்பான் மக்கள் சபை உறுப்பினர் தூதுக் குழுவிடம் தெரிவித்ததாக, அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த சோஷலிஸ்டு உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிருராம்.

புதிய உலகப் போர் ஏற்படுமாயின் சீனு இழக்கப் போவது எதுவுமில்லை என்றும், அதனுல் அப்படி ஒரு போர் மூண்டால் அது கண்டு சீனு அஞ்சாது என்றும் மா-சே-துங் தெரிவித்தாராம்

மேலும் மா-சே-துங், ஆசிய ஒற்றுமை ஏற்பட வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்திஞராம்.

பார்மோசா, பீகிங் வசமாவதற்கும், ஜப்பானும் பிலிப்பைன்சும் அமெரிக்கப் பிடியினின்று முழுவதும் விடுதலை பெறுவதற்கும் நாள் ஆகலாம் என்றும் மா-சே-துங் தெரிவித்தாராம்.

சீன ஜப்பான் நாடுகளிடையே உறவுகள் சுமுகமாகுமுன், இரு நாடுகளிடையேயும், வர்த்தகம் அபிவிருத்தி அடையவேண்டும் என்றும், அவர் தெரிவித்தாராம்

பம்பாயில் டெலிவிஷன்!

ரூ. 2 20,00,000 செலவில், இந்தியாவிலேயே முதலாவதாகப் பம்பாயில் 'டெலிவிஷன் ஸ்டுடியோ' நிறுவுவதற்கு இந்திய சர்க்காருக்கும்—சில மேற்கு ஜெர்மனி மின்சார நிறுவனங்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் எண்ணெய் ஊற்றுகள்

கண்டுபிடிப்பதற்கு ரஷ்ய நிபுணர் குழு வருமாம்!

இந்தியாவில் பெட்ரோலியம் எண்ணெய்எங்கெங்கு கிடைக்கும்- அதை எப்படி தோண்டி எடுக்கலாம்—என்று ஆராய்ச்சி நடத்தி அபிவிருத்தி வேலைகளில் உதவ எழுவர் அடங்கிய ரஷ்ய நிபுணர் குழு ஒன்று, அண்மையில் இங்கு வரவிருக்கிறதாம்.

எண்ணெய் தோண்டி எடுப்பது எப்படி என்பது பற்றி அறிய முதற்படியாகவே ரஷ்யக் குழுவை அழைத்திருப்பதாகவும், தொழில் நுணுக்க உதவி இத்துறையில் யாரிடமிருந்து குறுகிய காலத்தில் கிடைக்கிறதோ அதனைப் பயன்படுத்திக் கொள்ள சர்க்கார் திடமாக முடிவு செய்துகொண்டிருக்கிறது என்றும் இந்தியப் பேரரசின் இயற்கைவள இலாகா மந்திரி கே. டி. மாளவியா தெரிவித்திருக்கிருர். எண்ணெய் கிடைக்குமிடங்களைக் கண்டுபிடிக்க ஏராளமாகப் பணம் செலவு செய்ய சர்க்கார் தயாராயிருக்கிறது என்றும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ 30 கோடி முதல் 40 கோடி வரை செலவிட உத்தேசம் என்றும் அந்த மந்திரி கூறினுர்.

இந்தியாவின் தேவை, 30 இலட்சம் டன் எண்ணெய் என்றும், ஆனுல் இந்தியா 7 கோடி டன் வரை உற்பத்தி செய்ய இயலும் என்றும் மாளவியா தெரிவித்திருக்கிருர்.

ரிக்ஷாக்களை ஒழிக்க சர்க்கார் முடிவு

வேலைவசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

ரிக்ஷாக்களும், சைக்கிள் ரிக்ஷாக்களும் சென்னையில் விரைவில் ஒழிக்கப்பட்டுவிடும்.

ரிக்ஷா இழுப்போருக்கும், சைக்கிள் ரிக்ஷாக்காரர்களுக்கும் புதிதாக லைசென்சுகள் வழங்குவதில்லை என்று மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

தற்போது 3,700 சாதாரண ரிக்ஷாக்களும், சுமார் 1000 சைக்கிள் ரிக்ஷாக்களும் இருக்கின்றன. இவைகளுள் நல்ல நிலைமையில் உள்ள ரிக்ஷாக்களுக்கு மட்டுமே 'லைசென்சு' கொடுக்கப்படும். லைசென்சு இல்லாமல் ரிக்ஷா ஓட்டுவதை ஒழித்துக் கட்டுவதற்காக புதிதாக லைசென்சு வழங்கப்படும் ரிக்ஷாக்களின் தொகையை நிர்ணயித்து சட்டமியற்றவும் சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

ரிக்ஷா இழுப்போர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வைத்திய பரிசோதனைகள் மூலம் இந்த வேலைக்கு உடல் வலிமை இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு தனியார் தொழில் துறையில் வேலைவசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிகிறது.

புத்தி சுவாதீனம் இழந்தோர் தொகை

புத்தி சுவாதீனம் இழக்கும் சம்பவங்கள் 20 வயதுக்கும், 40 வயதுக்குமிடையேதான் பெரும்பாலும் ஏற்படுவதாகச் சென்னை மாநிலத்தின் வைத்தியக்கார மருத்துவ விடுதியின் நிர்வாக அறிக்கையிலிருந்து அறியப்படுகிறது

1954-ம் ஆண்டில் 1 237 பேர்கள் அனுமதிக்கப்பட்டதில் 893 பேர் 20—40 வயதுக்கிடையே உள்ளவர்கள் என்றும், இப்படியிருப்பது அசாதாரணமானதல்ல என்றும் அறிக்கை கூறுகிறது.

40—60 வயதுக்கு இடையே அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை 237.

இருபது வயதுக்குக் குறைவாக உள்ளவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் முறையே 80 பேரும், 27 பேரும் அனுமதிக்கப்பட்டனர்.

ரூ. 33 கோடி மதிப்புள்ள பம்பாய் கொய்னா திட்டம்

உலக பாங்கியிலிருந்து
230 இலட்சம் டாலர் கடனும்!

புதுடில்லி, அக். 30—
பம்பாய் மாநிலத்தில் உள்ள கொய்னா மின்சார உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உலக பாங்கியிலிருந்து 230-இலட்சம் டாலர் கடனாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

கொய்னா திட்டத்திற்கு ரூ 33 கோடிக்குமேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

★

கொய்னா இறக்குமதி குறைக்கக் கோரிக்கை

உதகை, அக். 21—
மலேரியத் தடுப்பிற்கான செயற்கை மருந்துகள் இறக்குமதியை நாட்டிற்குத் தேவையான அளவில் மூன்றில் ஒரு பாகமாகக் குறைக்குமாறு இங்கு நடைபெற்ற கொய்னா மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதாம்.

மேலும், சென்னை சர்க்காரின் கூட்டு முயற்சியுடன் மத்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள சின்கோனா சாகுபடியை உடனே முடித்துக் கொள்ளுமாறும், மாநாடு கோரியிருக்கிறது.

சாலைகள் அமைக்கத் திட்டம்

ரூ. 350 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, அக் 21—
9,000 முதல், 10,000 மைல் வரை நீளமுள்ள சாலைகள் அமைப்பதற்கும், 3 01,000 டன் எடையுள்ள கப்பல்கள் தயாரிப்பதற்கும் இரண்டாம் திட்டத்தின்கீழ், இந்தியப் போக்குவரத்து இலாகா திட்டங்கள் வகுத்துள்ளது என்றும், இதற்கு மொத்தம் ரூ 350 கோடி செலவாகுமென்றும் இத்திட்டங்களுக்கு திட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

3 சிறிய துறைமுகங்களைப் பெரிதாக்குவது உள்ளிட்ட துறைமுக அபிவிருத்தித் திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்றும் தெரிய வருகிறது.

மத்திய சர்க்கார் துறையில் ரூ 200 கோடியும், மாநில சர்க்கார்கள் துறையில் ரூ. 150 கோடியும் செலவிடப்படுமாம்.

ஆரம்பக்கல்விக் குழு

அறிக்கை வெளியாகியது

சென்னை, அக் 21—
ஆரம்பக் கல்வி குறித்து ஆராய டாக்டர் அழகப்பச் செட்டியார் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சிக் குழு தாக்கல் செய்துள்ள அறிக்கை இன்று அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

குழந்தையின் ஒரு ஆற்றலை மட்டும், இதர ஆற்றல்களைப் புறக்கணித்துவிட்டு வளர்ப்பது என்றில்லாது, எல்லா ஆற்றல்களையும் பொதுவாக வளர்ப்பதே கல்வியின் நோக்கம் என்ற அடிப்படையில் நின்று குழுவினர் சிபாரிசுகளைச் செய்திருக்கின்றனர்.

நவீன கால உலகத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும், தொடர்ந்து கல்வி பயிலுவோருக்கு உதவக் கூடியதாகவும் ஆரம்பக் கல்வி இருக்கவேண்டுமானால், அது ஒரு பொது அறிவை வளர்க்கும் கல்வியாக வேண்டும் என்று குழுவினர் குறிப்பிடுகின்றனர்.

துவக்கப் பள்ளிகளில் உள்ள எல்லா மாணவர்களும் பெறவேண்டிய குறைந்த பட்சப் பலன்கள் என்று, 15 அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

சாத்தனூர் அணைத் திட்டம்

புதுவை மக்களின் உரிமை பாதிக்கப்படாது!

அமைச்சர் உறுதிமொழி

சென்னை, அக். 21—
'சாத்தனூர் அணைத் திட்டத்தினால், தாழ்வான பகுதிகளில் வசிப்போரின் உரிமைகள், நலன்கள் பாதிக்கப்படமாட்டாது,' என்று, திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த புதுவை பாகூர் மக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

திராவிடத்தின் மூலிகை

ஏராளமான அளவில் பயிர் செய்வதற்குத் திட்டம்

இரத்த அழுத்தம் போன்ற சில வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு, 'பாம்புக் களாக்காய்' என்ற செடியின் வேரிலிருந்து, 'சர்ப்பகந்தி' என்ற மருந்து பயன்படுகிறது.

பெரிய அளவில் இச்செடியின் சாகுபடியை மேற்கொள்ளுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்வதற்கு மைசூர் மாநில சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

இந்தத் தாவர வகையைப் பரவச் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட ரூ. 1 இலட்சம் திட்டத்தை திட்டக் குழு ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

'சர்ப்பகந்தி' என்ற வேர், ஏராளமான அளவில் அமெரிக்காவுக்கு இப்பொழுது ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தொழிலாளருக்கு வீட்டு வசதி!

புதுடில்லி, அக். 21—
சர்க்கார் நிதி உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கான திட்டத்தின்கீழ் 5,632 வீடுகளைக் கட்டுவதற்காக, இந்திய சர்க்கார் கடந்த ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில், மொத்தம் ரூ. 2,03,44,380 வழங்கியுள்ளனர்.

கோவை மாவட்டம் வசந்தா ஆலை நிறுவனத்திற்கு ரூ. 2,00,400 (ரூ. 1,20,240 கடனும்—ரூ. 80,160 மானியமும்) வழங்கியுள்ளனர்.

திரு—கொச்சி சர்க்காருக்கு பாதிக் கடனும், பாதி மானியமுமாக மொத்தம் ரூ. 2,70,000 தரப்படும்.

மைசூர் சர்க்காருக்கு இதே போல மொத்தம் ரூ. 1,35,000 கிடைக்கும்.

சென்னை மவுண்ட் ரோடில் 14 மாடி கட்டிடம்

அப்பீல் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

ரூ. 65 இலட்சம் செலவில், சென்னை மவுண்ட் ரோடில் 14 மாடி கட்டிடம் ஒன்று கட்டுவது கம்பெனியின் பணத்தை வீணாக்குவதாகுமென்று, யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பாலிசிதாரர்கள் இருவர் கம்பெனி மீது தாக்கல் செய்திருந்த வழக்கின் அப்பீலில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'கட்டிடம் கட்டுவது முதலீடு செய்வதாகும்; டைரக்டர்களுக்கு இதற்கு உரிமையிருக்கிறது; இதை ஆட்சேபிப்பதற்கு பாலிசிதாரர்களுக்கு உரிமை இல்லை,' என்று தீர்ப்பளித்துள்ளனர்.

****

மாநில மாநாடு விரைவில் நடைபெற!

★

மாவட்டக் கழகங்கள் செலுத்த வேண்டிய நிதியை விரைவில் செலுத்துமாக!

★

இன்னும்

சிறு தொகை செலுத்த வேண்டிய மாவட்டங்கள்:

சென்னை-திருச்சி-கோவை-மதுரை - நெல்லை

★

பெருந் தொகை செலுத்தவேண்டிய மாவட்டங்கள்:

செங்கற்பட்டு - வட ஆற்காடு - பெங்களூர் - சேலம் - இராமநாதபுரம் - நாஞ்சில் - சித்தூர்

★

வரவேற்புக் கட்டணம் செலுத்தாத பொதுக்குழு உறுப்பினர் கடமையைச் செய்வார்களாக!

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்

****

உல்லாசப் பிரயாணிகள்

போக்குவரத்து

இந்தியா—ரஷ்யா ஒப்பந்தம்

இந்தியா, ரஷ்யா ஆகியவற்றைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணிகளின் தாராளப் போக்குவரத்திற்கு சரித்திரத்திலேயே முதல் முறையாக வசதி செய்கிற ஒப்பந்தம் ஒன்றை இரு சாராரும் இன்று மேற்கொண்டிருக்கின்றனர்.

புத்தரின் எலும்புகள் கிடைத்தனவாம்!

புத்தரின் புனித எலும்புகள் சில அவர் பிறந்த இடமாகிய மேற்கு நேபாளத்தில் உள்ள லும்பினியில் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

பீகாரில் இரயில் முன் மறியல்

போக்குவரத்துத் தடைப்பட்டது

பீகார் மாநிலத்தில் உள்ள சிங்பும் மாவட்டத்தின் சில பகுதிகள், ஒரிசாவுடன் இணையவேண்டுமென்று கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரயில் பாதையில் நின்றுகொண்டு இரயில் போக்குவரத்து நடைபெற முடியாது மறியல் செய்ததின் விளைவாக, பாதம்பார்—டாடா நகர் இடையே முழுவதுமாக இரயில் போக்குவரத்து அற்றுப் போய்விட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

அரிசி வியாபாரம் செய்வதற்குத் தடை

இலங்கை இந்தியருக்கு மற்றொரு 'பேரிடி'

அரிசி வியாபாரம் செய்வதற்கு இனி இலங்கை இந்தியர்களை அனுமதிக்கக் கூடாதென, இலங்கை மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறதென செய்தி ஒன்று கூறுகிறது.

இலங்கையரல்லாதவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 'லைசென்சு'களை திரும்பப் பெற்று, அவற்றை இலங்கை மக்களுக்கோ, அல்லது, கூட்டுறவுச் சங்கங்களுக்கோ அளித்துவிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இந்தியர்கள்தான் அரிசி வியாபாரத்தில் ஏகபோக உரிமை வகிப்பதாகவும், தற்போது 78 மொத்த வியாபாரிகளும், 628 சில்லறை வியாபாரிகளும் இருப்பதாகவும், இவர்களனைவரும் இந்தியர்களே என்றும், மூன்று மாத 'முன்னறிவிப்பு' தந்து இவர்களுடைய 'லைசென்சு'களைத் திரும்பப் பெற வேண்டுமெனவும் உணவு மந்திரி கூறியுள்ளாராம்.

இலங்கைக் குடியுரிமைக்கு மனுச் செய்துள்ள இந்தியர்களின் பிரச்சினையில் முடிவு செய்யப்படும்வரையில் அரிசி வியாபாரம் செய்வதற்கு அவர்களை அனுமதிக்கக் கூடாதென்றும் அவர் கூறினாராம்.

'விசா' தரும் நிலையம்

யாழ்ப்பாணத்தில் திறக்க கொத்தலாவலை அனுமதி மறுப்பு

கொழும்பு, அக். 21—
யாழ்ப்பாணத்தில் ஒரு 'விசா' தரும் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு, இந்திய தூதுவராலயத்தவருக்கு அனுமதி தரும் உத்தேசம் எதுவும் இல்லை என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை மாணவர் சங்கத் தலைவர் தன்னைச் சந்தித்தபோது இது குறித்து புனராலோசனை செய்ய வேண்டும் என்றும், அதன் பின்னர் அம்மாதிரி ஒரு அலுவலகம் திறக்க அனுமதிப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை. என்று தான் தெரிவித்ததாயும், ஆனால் புனராலோசனை செய்தபோது, அதனை அனுமதிக்க முடியாது என்று தான் கண்டதாயும் பிரதமர் கொத்தலாவலை தெரிவித்திருக்கிறார்.

மக்ஆர்தர் குட்டு வெளியாகிறது

வாஷிங்டன், அக் 22—
1945-ல் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் ரஷ்யாவையும் கூட்டுச் சேர்த்துக் கொள்வதை தாம் எதிர்த்ததாக, ஜெனரல் மக்ஆர்தர் அண்மையில் கூறியது உண்மை நிலவரத்தைத் தெரிவிப்பதாகாது என்று கூறி, அமெரிக்க வெளிநாட்டு இலாகா, யுத்தகால இரகசிய தஸ்தாவேஜுகளை வெளியிட்டிருக்கிறது.

மக்ஆர்தர் அண்மையில் பேசுகையில், யால்டா மகாநாட்டில் தாம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும், தம்மைக் கேட்டிருந்தால் இப்படி கடைசி, சமயத்தில் ரஷ்யாவைக் கூட்டுசேர்த்துக் கொள்வதை எதிர்த்திருப்பார் என்றும் கூறியிருக்கிறார்.

யால்டா மாநாடு முடிந்த ஒரு மாதத்திற்குப் பின் — ஜப்பான் சரணாகதியடைவதற்கு சில வாரங்களுக்கு முன் மக்ஆர்தர் ரஷ்யா கூட்டு சேர்ந்ததை ஆதரித்ததற்கு ஆதாரம் இன்று வெளியிடப்பட்ட தஸ்தாவேஜுகளில் காணப்படுகிறது. ஜப்பானைத் தோற்கடித்ததில் ஆன்சேதங்களைப் பகிர்ந்து கொள்ள ரஷ்யாவை சேர்ப்பது சரிதான் என்று மக்ஆர்தர் ஒரு முக்கிய அதிகாரியிடம் கூறியதாக அந்த தஸ்தாவேஜில் இருக்கிறது.

மேலும் ஜப்பானுக்கு எதிரான போரில் ரஷ்யாவை கூட்டுச் சேர்த்துக் கொள்ள அமெரிக்காவுக்கு 1941 முதலே எண்ணம் உண்டு என்றும், ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்ட 3 தினங்களுக்குப் பின்புதான், ரஷ்யா ஜப்பானுடன் யுத்தத்திற்குக் கிளம்பியது என்றும் அவற்றில் காணக்கிடக்கின்றன.

செய்திச் சுருள்

★

அண்ணாமலை நகர் தி. மா. முன்னேற்றக் கழகம்

அண்ணாமலை நகர் (அண்ணாமலை பல்கலைக் கழகம்) திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்:— செயலாளர்: பு. இராமசாமி; துணைச் செயலாளர்கள்: க. சிங்காரவேலு, இராம. இராமநாதன்; பொருளாளர்: கோ. இராமமூர்த்தி.

கழகத் துவக்க விழா 29-10-55 அன்று நடைபெறும்.

அரியலூர் தி. மா. மு. க. அமைப்பு விழா

11—10—55-ல், திராவிட இளைஞர் மன்றத்தில், தோழர் கு தங்கவேலு தலைமையில், கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் சு. கன்னையன், மாரிமுத்து, க. பாலகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன் ஆகியோரை முறையே, செயலாளர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், தோழர்கள் கோ. சிவப்பெருமான், ஆர். சின்னையன், தமிழியக்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்பு, தலைவர் தோழர் தங்கவேலு 'மாணவர்கள் பணி' என்பது பற்றிப் பேசினார்.

தென்பகுதி ரயில்வே மென் யூனியன்

சென்னை கிளைப் பொதுக் குழு

13—10—55 மாலை, செல்லை சைதையில், தென் பகுதி இரயில்வே மென் யூனியன் சென்னை கிளையின் பொதுக்குழு, தோழர் இராகவானந்தம் தலைமையில், நடைபெற்றபோது, தோழர்கள் டி. கல்லப்பன், மா. ரெத்தினம், கா. மா சுவாமிநாதன், மோகன், ஒய். எஸ். சாலியா உசேன் ஆகியோர் முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், மத்திய செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத் துவக்கத்தில், தலைவர் தமது முன்னுரையில், யூனியன் வளர்ச்சி குறித்தும், தற்போதைய சம்பள உயர்வு குறித்தும், ஐ என். டி. யூ. சி-யின் வெளி வேடத்தை அம்பலமாக்கியும் சொற்பொழிவாற்றினார்.

பாரதிதாசன் பகுத்தறிவு மன்றம்

14—10—55ல், இராஜப்பாளையம் சங்கரபாண்டியபுரம் தெருவில மேற்படி மன்றம் அமைக்கப்பட்டு, தோழர்கள் சு. சுப்பிரமணியம், ஆர். இராசகோபால், மு. திருவண்ணாமலை ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அருப்புக்கோட்டை வளர்மதி நாடக மன்றம்

15—10—55 இரவு 11 மணிக்கு தோழர் கு. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் ப. பெ ந நல்லதம்பி, இரா. பொன்னரசு, கு. அருணாசலம் ஆகியோர் முறையே பொறுப்பாளர், செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உரிமைகள் ஓர்புறம்—அவற்றைப் பறிக்கும் பாதகம் ஓர்புறம்

ஜனநாயகத்தின் பெயரால் பதவி பெற்றோரின் எதேச்சாதிகாரப் போக்கு

சென்னை கூட்டத்தில் கி. மனோகரன் விளக்கம்

"'ஏழைகள் சிந்துகின்ற கண்ணிரைத் துடைப்போம்' அல்லும் பகலும் பாடுபடுகின்ற தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை செய்ய வழிவகை செய்வோம்'—என்று கூறித்தான் காங்கிரசார் பொது மக்களை அணுகினர்; 'வாழ்க்கையில் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பாட்டாளிகளின் துயர் துடைத்து, அவர்களுக்கு உல்லாச மாளிகைகள் எழுப்பி, உல்லாசிகளாக்குவோம்' என்று கூறித்தான் காங்கிரசார் பொதுமக்களை அணுகினர்; இப்படிப் பொது மக்களுக்கு ஆசை வார்த்தை கூறி, வாக்குப் பெற்று, அரசுக் கட்டில் ஏறிய பிறகு எந்த அளவிற்கு மக்களுக்குத் தாங்கள் சொன்ன வாக்குறுதிகளைக் காப்பாற்றியுள்ளார்கள்? எந்த அளவிற்கு மக்களுக்கு உரிமை தந்திருக்கிறார்கள்? நாம் இதைக் கூறுவதால் காங்கிரசை வசைபொழிய வேண்டுமென்பதோ, இழித்தும்—பழித்தும் பேச வேண்டுமென்பதோ எண்ணமல்ல; 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதிக்கு முந்திய நாட்கள் வரையிலும் காங்கிரஸ் கட்சி ஜனநாயகப் பண்பு கொண்ட ஒன்றாகத்தான் இருந்ததை நாமும் அறிவோம்—நாடும் அறியும்.

"ஆனால், என்றைக்கு அது அரசுக் கட்டில் ஏறிற்றோ, அன்றே, அது ஒரு எதேச்சாதிகார இயக்கமாக மாறிவிட்டது; ஜனநாயகத் தன்மை—ஜனநாயகப் பண்பு ஒரு சிறிதும் இல்லாமல் போய்விட்டது. அரசு கட்டில் கிடைத்த உடனேயே, காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்தில் துறவறம் பூண்டுவிட்டது. அரசு கட்டிலைப் பிடித்த அன்று முதல் காங்கிரஸ் கட்சி, தனது இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கையாண்ட முறைகளால், எந்த ஒரு ஜனநாயகத்தை மக்கள்முன் நிறுத்தி, அதன் பேரில் வாக்குப் பெற்று அரச பீடம் பெற்றார்களோ அந்த ஜனநாயகத்தைத் தூக்குமேடைக்கு அனுப்பிவிட்டது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் தனது எதேச்சாதிகாரத்தின் சந்நிதானத்தைத்தான் மக்களுக்கு எடுத்துக் காட்டிவருகிறது.

"பிரிட்டனின் ஆட்சியின் அடிப்படை ஜனநாயகத் தத்துவத்தைக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள்; அதற்கடுத்தாற்போல் அமெரிக்காவைப் பார்த்தால், அங்கும் ஜனநாயக ஆட்சி இருக்கிறதாகக் காண்கிறோம்; பிரெஞ்சுப் புரட்சியை உருவாக்கிய பிரான்ஸ் நாட்டு ஆட்சியின் அடிப்படைத் தத்துவம்—சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைக் கொண்ட ஜனநாயக ஆட்சி; அடுத்து சைனாவைப் பார்ப்போமேயானால், அதன் அடிப்படை வெறும் ஜனநாயகத்தை மட்டும் காண்பிக்கவில்லை—மக்கள் மக்களாலேயே ஆளப்படும் மக்கள் ஜனநாயக ஆட்சி நிலவுகிறது; ரஷ்யாவை எடுத்துக்கொண்டால், அங்கே நிலவுவது முதலாளித்துவ ஜனநாயகமல்ல; மற்ற நாடுகளிலாயினும் ஜனநாயகம் எனும் தன்மை—பண்பு இருந்தாலும், முதலாளித்துவம் இருந்துவருகிறது; ஆனால், ரஷ்யாவிலோ, 'அந்த முதலாளித்துவத்துடன் கூடிய ஜனநாயகமல்ல; நேர்மையான—கலப்படமற்ற ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது எங்கள் ஆட்சி,' என்று ரஷ்யர்கள் கூறுகின்றனர்; அப்படியே நமது கருத்தையும், கவனத்தையும் இந்தியா மீது திருப்புவோம்—'இந்தியாவின் ஜனநாயகத்தைப்போல் வேறு எந்த நாட்டிலும் ஜனநாயகம் இல்லை—காரணம், நமது ஜனநாயகத்திலே ஒரு 'தெய்வீக அம்சம்' இருக்கிறது' என்று பண்டிதர் கூறுகிறார்.

"ஆனால், நமது நாட்டிலுள்ள ஜனநாயகமோ என்றைக்கோ மாண்டுபோய்விட்டது. ஆட்சிப் பொறுப்பைக் கையிலேந்திய காங்கிரஸ், உடனே அரசியல் சட்டத்தை உருவாக்கியது. நாட்டைவிட்டு வெளியேறிய வெள்ளையன், இந்த நாட்டுத் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கும் முன்னர் இடைக்கால சர்க்கார் ஒன்றை அமைத்தான்; அந்தச் சர்க்காரில்தான் ஒரு கேவலமான அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசியல் சட்டமும், பொதுமக்களால் அங்கீகரிக்கப்படாத ஒன்று. பொதுமக்களைக் கலந்தாலோசிக்காமலேயே நாட்டின் 'தலைவிதியை' நிர்ணயிப்பதாகக் கூறிக்கொள்ளும் அந்த அரசியல் சட்டத்தை உருவாக்கியதின் மூலம், காங்கிரசார், ஜனநாயத்தைக் கொலைக் களத்திற்கு அனுப்பிய கசாப்புக் கடைக்காரர்கள் ஆகிவிட்டனர்.

"இன்றைய காங்கிரஸ் ஆட்சி, எந்த அளவிற்குத்தான் ஜனநாயகத்தை வாழ்த்துகிறது—ஜனநாயகத்தை மதிக்கிறது?

"'நாட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை உரிமைகளை அளிக்கிறோம்; மக்கள் தங்கள் கருத்துக்களைப் பேச பேச்சுரிமை அளித்திருக்கிறோம்; தங்களது கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க எமது சட்டத்தின் மூலம் எழுத்துரிமை தந்திருக்கிறோம்; எங்களது சட்டத்தின் வாயிலாக, ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும்—எழுதுவதற்கும், பேசுவதற்கும் தேவையான உரிமைகளைத் தந்திருக்கிறோம்; உங்களது கருத்துக்களை, மேடை கட்டிப் பேசி மக்களிடம் தெரிவியுங்கள்; ஆலயங்களிலே அனைவரும் சென்று வணங்குவதற்கு வழி செய்திருக்கிறோம்; வறுமைப்பிடியில் சிக்கித்தவித்து வாடிப் போகாதிருக்க நமது சர்க்கார் சுயஉரிமை பெற்றுவிட்டது; அடிப்படை உரிமை என்ற பெயரிலே, தீண்டாமையை ஒழிப்போம்; தீண்டப்படாதவன் என்று ஒதுக்கப்பட்ட மனிதனே, நீ மனிதனாகவே நடமாடுவதற்கான வாய்ப்பை உனக்குத் தந்திருக்கிறோம்'—என்று, காங்கிரஸ் தனது அரசியல் சட்டத்திலே எழுதிக் காட்டியிருக்கிறது. நாம் எல்லாம் பூரிப்படைகிறோம்—பெருமைப்படுகிறோம—'இவ்வளவு உரிமைகளையும் நம்மை ஆளும் சர்க்கார் தந்துவிட்டதா?'—என்று நினைக்கும் போது!

"ஆனால், இந்த உரிமைகளையெல்லாம் படித்து முடித்துவிட்டு, இவைகளை எந்தச் சட்டப் புத்தகத்தில் எழுதியிருக்கிறதோ அதே புத்தகத்தின் மறு பக்கத்தைத் திருப்பிப் படித்தால் அங்கே காண்கிறோம்—காங்கிரசின் எதேச்சாதிகாரப் போக்கை! எந்தப் புத்தகத்தில் பேச்சுரிமை அனைவருக்கும் உண்டு என்று எழுதப்பட்டிருக்கிறதோ, அதே புத்தகத்தின் மறுபக்கத்திலே, 'பேச்சுரிமைக்குத் தடையும் உண்டு' என்று எழுதப்பட்டிருக்கிறது.

"'உனக்கு எழுத்துரிமை தந்திருக்கிறோம்—ஆனால், நீ எழுத ஆரம்பித்தால் உன்னுடைய கரங்கள் துண்டாடப்பட்டுவிடும்; பேசும் உரிமை இருக்கிறது—ஆனால், நீ கூட்டம் கூட்டிப் பேசுவாயேயானால் உனது கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொலை செய்வேன்' என்று இருக்கிறது; ஆம்! உரிமைகள் ஒருபுறம்—அந்த உரிமைகளைக் கொலை செய்யும் எதேச்சாதிகாரம் மற்றோர் புறம்; இதுதானா ஒரு நாட்டின் அரசியல் சட்டம்? இந்தச் சட்டத்தை காங்கிரஸ் உருவாக்குவதற்குத்தானா ஆயிரமாயிரம் மக்கள் தங்கள் வாழ்வையும் வளத்தையும் இழந்து, செல்வத்தையும் சுற்றத்தையும் துறந்து, தூக்குமேடையையும் துச்சமென மதித்துத் தங்கள் உயிரையே தியாகம் செய்தது?

"இத்துடன் மட்டுமா? ஆட்சி பீடத்தைக் கையிலேந்தியதும்—காங்கிரஸ் உருவாக்கிய அரசியல் சட்டத்தைப் படித்ததும், உலகத்தின் எல்லாப் பாகத்திலுமுள்ள ஜனநாயக விரும்பிகள் அதனைப் பார்த்துக் காறி உமிழ்ந்தனர். 'இப்படியும் ஒரு சட்டம் உலகில் இருக்கிறதா?'—என்று அவர்கள் ஆச்சரியத்துடன் வினவி, எச்சில் உமிழும் வகையில், 'தடுப்புக் காவல் சட்டம்' என்று ஒரு சட்டத்தையும் இயற்றியிருக்கின்றனர். 'பாதையோரத்திலே நடந்து செல்பவன் அரசியலைக் கவிழ்த்துவிடுவான்' என்று ஐயப்பட்டால், அவனைப் பிணமாக்க சட்டம் வகுத்திருக்கின்றனர்—'தடுப்புக் காவல் சட்டம்' என்ற பெயரிட்டு; 'ஜன நாயக'த்தையே கருவறுத்து விட்டனர்—நீதியின் பேரால், நேர்மையின் பேரால்—அரசியல் நாணயத்தின் பேரால் இந்த நாட்டின் ஆட்சிப் பீடம் ஏறியவர்கள்!

"இன்றைக்குப் பம்பாய் மாநிலத்தின் பிரதமராக இருக்கின்ற எதேச்சாதிகாரவாதி மொரார்ஜி தேசாய், 2 தடவைகள் பொதுமக்களால் அரசியல் துறையிலிருந்து விரட்டி விரட்டி அடிக்கப்பட்டவர்—பொதுத் தேர்தலின்போது; 3-வது முறையாக எப்படியோ பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றார்; அப்படி இரண்டு தடவையும் பொதுமக்களின் ஆத்திரத்திற்கு ஆளாகி, அரசியலினின்றும் துரத்தியடிக்கப்பட்டு, 3-வது தடவையாகக் காங்கிரஸ் பணக் கோட்டையின் உதவியால் வெற்றி பெற்ற அவர், இன்று அம்மாநிலத்தின் பிரதமராக அமர்ந்திருக்கிற பரிதாபக் காட்சியை நாம் காண்கிறோம்.

"இதைப் பார்த்தார் டாக்டர் அம்பேத்கார்—'இந்த நாட்டின் சட்டத்தை உருவாக்கினவன் நான்; என் கையாலேயேதான் எழுதினேன்; ஆனால், என் கண்ணெதிரேயே காண்கிறேன்—எந்தச் சட்டத்தின் மூலம் ஜனநாயக முறைப்படி பிரதமராக வரவேண்டுமோ அதை விடுத்து, ஜனநாயகத் தன்மைக்கு மாறுபாடான வழியிலே வருவதை! இங்கு மட்டுமல்ல—சென்னையிலும் கூடத்தான் காண்கிறேன்—'ஜனநாயகத்தன்மைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதமராக வரவேண்டும்' என்று எந்தச் சட்டத்தை நான் வரையறுத்தேனோ, அதே சட்டம் என் எதிரிலேயே புறக்கணிக்கப்பட்டு; கொல்லைப்புற வழியிலே ஆச்சாரியார் பிரதமரானாரே! இந்த இரண்டு சம்பவங்களும் அரசியல் சட்டத்தைப் பலாத்காரமாக விபச்சாரம் செய்ததாகும்'—என்று கூறினார். கூறினதுடன் அவர் நின்றுவிடவே இல்லை; 'எனது மனம் கொதிக்கிறது; எனது நெஞ்சம் எரிமலையாகிறது; அந்தச் சட்டத்தையே திக்கிரையாக்க வேண்டும்'—என்று கொதித்தெழுந்தார். இந்த நிலையைத்தான் நாம் இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் எப்பகுதியில் சென்றாலும் காண்கிறோம். சட்டம் சட்டமாகவே இருக்கிறது; ஆனால் பாதுகாப்பதற்கு ஆளில்லை.

"தேர்தல்களிலே தோற்றுப்போனவர்களெல்லாம் கவர்னர்களாக்கப்படுகின்றனர்; இதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறதா? எந்தச் சட்டத்தை உருவாக்குவதற்காக ஏராளமான உயிர்களைப் பலிகொடுத்தார்களோ, அதே சட்டத்தை இன்று விலை கூறிப் பேரம் பேசுகின்றனர் காங்கிரசார். தங்களுடைய எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டப் பட்டாளமே உருவாக்குகின்றனர். ஜனநாயகத்திற்காகப் பாடுபடுவதாகக் கூறி எந்த மக்களால் ஆசனம் தரப்பட்டார்களோ, இன்று அதே மக்களை சிறைக்கூடத்திற்குத் தள்ளுவானேன்? அப்படிப்பட்ட ஜனநாயகத்தை நாம் மயானத்திற்கு அனுப்ப வேண்டியவர்களாவதைத் தவிர வேறு என்ன செய்ய இருக்கிறது?

"ஜனநாயகம் ஒரு வீட்டிலே எரிந்துகொண்டிருக்கிற ஒளி விளக்கு; ஆனால், எதேச்சாதிகாரமோ, காட்டுத் தீ—என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்; வீட்டிலே ஒளி வீசித் திகழுவதற்குப் பதிலாக ஒளி மங்கி விளங்கும் அந்த ஜனநாயகத்தை நமது கையிலே தாங்கி, நமது இலட்சியத்தை—கொள்கையைப் பொதுமக்களிடம் எடுத்துக்காட்டி, இன்றோ, நாளையோ—என்றேனும் ஒரு நாள் நாம் வெற்றி பெறத்தான் போகிறோம். உடன் பிறந்தார் போன்றவர்களாலேயே நாம் ஒதுக்கப்பட்டிருக்கிறோம். இலட்சியத்திற்காக உயிர் துறந்த பிணங்கள் சொல்லும் சோகக் கதைகளைக் கேட்டுவிட்டோம்; மஜீத்துக்களையும், பாண்டியன்களையும் பலி கொடுத்துவிட்டோம்; என்றாலும், நாம் நமது இலட்சியத்தை அடைந்தே தீருவோம். நமது இலட்சியத்தை அடையும்வரை நாம் உறங்கப் போவதில்லை—ஓய்வெடுக்கப் போவதில்லை. அது நமது உடலோடு—உயிரோடு ஒன்றுகலந்த இலட்சியம்."

—இவ்வாறு தோழர் நாஞ்சில் கி. மனோகரன் 23—10—55-ல், சென்னை பெரம்பூர் (செம்பியம்) குருசாமி கிராமணி தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஈரோடு நகர தி.மு.கழக உறுப்பினர்கட்கு

"ஈரோடு நகர தி. மு. சழகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து விவாதிப்பதற்காக, 1-11-55 மாலை 5 மணிக்கு, நகர தி. மு. சழக அலுவலகத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ கி. சம்பத் அறிவிக்கிறார்.

சீராமபுரம் (பெங்களூர்) தி.மு. கழக உறுப்பினர்கட்கு

26—10—55 காலை 9-30 மணிக்கு, சீராமபுரம் (பெங்களூர்) தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

மன்னர் நாடு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு இப்போது நாடு திரும்பியிருப்பதை ஒட்டி, தாடியை எடுத்துவிட முடிவு செய்து மன்னர் முன்னிலையில் தாடி எடுத்திருக்கின்றனராம்.

முதலில் அவர்கள் மன்னருடன் நின்று புகைப்படம் பிடித்துக் கொண்டனர். பின்னர் ஒருவர், சிலரது தாடிகளை எடுக்க முற்பட்டார்.

சிலருடைய தாடி எடுக்கப்படும் வரை இருந்த மன்னர், பின்னர் புறப்பட்டுவிட்டாராம்

நாடெங்கணும் இதுபோன்று தாடி வளர்த்திருந்தவர்கள் இம்மாதிரி விழா நடத்தியிருக்கின்றனர்.

அச்சத்தால்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்திற்குத் தோழர் கே. கோவிந்தசாமி தலைமை தாங்கினார்.

தலைவர் தமது உரையில் கழகக் கொள்கைகள் வெற்றியடைந்து வருவது குறித்தும், நாட்டின் தற்போதைய நிலை, பிரிவினையின் அவசியம் ஆகியவைகள் குறித்தும் பேசினார்.

பின்னர், தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், அம்பில் தர்மலிங்கம், கே சே. நீலமேகம் ஆகியோர் வடவரின் ஏகாதிபத்திய வெறியைக் குறித்தும், ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரினால் நடைபெறும் ஓரவஞ்சனை, கூட்டுக் கொள்ளைகள் பற்றியும் விளக்கிப் பேசினர்.

இறுதியில் அண்ணா அவர்கள் பேச எழுந்ததும், பாபநாசம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. தாஜுதீன் அவர்கள் அண்ணா அவர்களுக்கு கழகத்தின் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளித்து, கைத்தறி ஆடைகள் அணிவித்தார். அதை அடுத்துப் பல கழகங்களின் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு கழகத்தின் கொள்கைகளில் குறை கண்டுபிடித்தவர்கள் இதுவரையில் எவரும் இல்லை; நாம் கட்டிக் காக்கும் கழகக் கொள்கைகள் மீது அப்பழுக்குச் சொல்லுவதற்கு எவருக்கும் துணிவு இராது."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.